## தலைப்பு 001 – அதிமேதகு சனாதிபதி அலுவலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 001 - அதிமேதகு சனாதிபதி அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 11(1) நிதிக்கூற்றுக்கள் பிரிவின் பிரகாரம் சனாதிபதி செயலகம் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் சனாதிபதி செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஒக்தோபர் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சனாதிபதி அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்பவர்களின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் சனாதிபதி செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் சனாதிபதி செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

## 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு<br><br>இலங்கை அரசின் நிதி பிரமாணங்கள் | இணங்காமை | | |
| | நி.பி 315, 880 மற்றும் 881 | சனாதிபதி செயலகத்தில் பிணை வைக்க வேண்டிய எந்த அலுவலரும் பிணையினை வைப்பு செய்யவில்லை. | அரச உத்தியோகத்தர்களின் பிணை தொடர்பான நடவடிக்கைகளை அரசாங்க உத்தரவாத சங்கம் அல்லது தேசிய சேமிப்பு வங்கி மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுவதுடன், அரச அலுவலர்களின் பிணை வைப்பு தொடர்பாக தற்போதுள்ள வழிகாட்டுதல்களின் படி அதிகாரிகளின் பதவிகளின் பிரகாரம் வைக்க வேண்டிய பிணையின் பெறுமதி தொடர்பாக குறிப்பாக குறிப்பிடாத காரணத்தினால் அலுவலர்களின் பொறுப்புக்கள் மற்றும் இடர்களை கருத்திற்கொண்டு பிணை | நிதி பிரமாணங்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தீர்மானத்தினை எடுக்க வேண்டும் என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஆ) | 04/2018 ஆம் இலக்க முகாமைத்துவம் மற்றும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய சுற்றறிக்கையின் 1:3:1 ஆம் பந்தி மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவி செயலாளர் (நிர்வாகம்) இன் PS/IAD/TR/Q/Insurance/2024/25 ஆம் இலக்க மற்றும் 2023 ஒக்தோபர் 21 ஆம் திகதிய கடிதம் | சகல வாகனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு முறை மதப்பீட்டை பெறுவது கட்டாயமாக உள்ள போதிலும் சனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் மீளாய்வாண்டின் போது சுற்றறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்படவில்லை. | வாகனங்களின் தற்போதைய பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்ட போதிலும் சனாதிபதி செயலகம் 600 வாகனங்களினை நாடு பூராகவும் கடமையில் ஈடுபடுத்தியுள்ளதனால் அதனை ஒரு குழுவினால் மேற்கொள்வது சிக்கலாக உள்ளது, எனவே மதிப்பீட்டு செயன்முறையை சரியாக மேற்கொள்வதற்கு உப குழுக்களை நியமிப்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு தெரிவக்கப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டு குழு அறிக்கை கிடைத்த பின்னர் தற்போதைய பெறுமதியை உடனடியாக வழங்க முடியும். | -மேற்படி- |

**2 நிதி முகாமைத்துவம்**

**2.1 கிரய முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூன்று செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு மொத்தம் ரூபா 3,000,000 மூலம் ஆண்டின் போது எவ்வித செலவினமும் இன்றி மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு எஞ்சியுள்ளது. | முன்னாள் ஜனாதிபதிகளுக்கு கட்டிடம் மற்றும் நிர்மாணத்திற்காக இந்த ஒதுக்கீடுகள் ஒதுக்கிடப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதிகளினால் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் முழு ஒதுக்கீடுகளும் எஞ்சியுள்ளது. | தேவைகளை கண்டறிந்து வருடாந்த திட்டங்களும் மதிபீடுகளும் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டு செலவின விடயங்களின் முழுமையாக மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு மொத்தம் ரூபா 3,500,000 தொகை நி.பி.66 ஊடாக ஏனைய செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. | எதிர்பார்த்தபடி செலவினங்கள் உருவாக்கப்படாததாலும், தேசிய சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழு முடிவுறுத்தப்பட்டதாலும் மிகை ஒதுக்கீடுகள் குறை செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டன. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 15 செலவின விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீடு ஒதுக்கீடுகள் போதியளவு ஒதுக்கப்படாததால் நிதிப் பிரமாணங்கள் 66 ஊடாக மூல ஒதுக்கீட்டில் 20 முதல் 456 சதவீதம் வரையிலான மொத்தம் ரூபா 223,855,000 தொகையினால் ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. | அத்தியவசிய கடமைகளுக்காக உத்தியோகத்தர்களை நியமித்தல், பராமரிப்பு செலவு அதிகரிப்பு, கட்டிடங்களுக்கு தேவையான பணிகளை மேற்கொள்ள வேண்டியமை, எதிர்பார்த்த பெறுமதியை விட பதவிநிலை உத்தியோகத்தர்களால் போக்குவரத்து கொடுப்பனவுகள் கோருகின்றமை, வாகன உதிரிப்பாகங்களின் விலைகள் அதிகரிப்பு, புதிய பிரிவுகளை நிறுவுதல், வெளிநாட்டு பயிற்சிக்காக அலுவலர்களை அனுப்புதல், எழுதுகருவிகளின் செலவு அதிகரிப்பு, புதிய ஆணைக்குழுக்களை நிறுவுதல், எரிபொருள் கூப்பன்களின் கணக்கீடு செய்வதற்காக மிகை செலவின விடயத்திலிருந்து தேவையான ஏற்பாடுகள் மாற்றப்பட வேண்டியமை மற்றும் தேவையான வசதிகளுக்காக போதிய ஏற்பாடு இல்லாமை போன்ற காரணங்களினால் மிகை செலவின விடயத்தில் இருந்து மாற்றப்பட்டது. | -மேற்படி- |
| ( ஈ) | 06 செலவின விடயங்களுக்கான வருடாந்த மதிப்பீடுகளின் ஏற்பாட்டுக்கு மேலதிகமாக நி.பி 66 மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு ஊடாக மொத்தம் ரூபா 801,500,000 ஏற்பாட்டை மேற்கொண்டு 49 சதவீதம் முதல் 3648 சதவீதம் வரையிலான வீச்சில் இந்த ஏற்பாடு அதிகரித்துள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு விஜயங்களை விட இராஜதந்திர மட்டத்தில் மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளுக்கான அழைப்புக்கள், எரிபொருள் விலை அதிகரிப்பு, மின்சாரம் மற்றும் நீர்க்கட்டண அதிகரிப்பு, முன்னைய ஆண்டுகளில் செலுத்த வேண்டிய வீட்டு வாடகை நிலுவைகளை தீர்த்தல் போன்ற காரணங்களினால் மதிப்பிடப்பட்ட ஏற்பாடு போதுமாக இருக்கவில்லை, எனவே மிகை செலவின விடயங்கள் மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு மூலம் ஏற்பாடுகள் பெறப்பட்டது. | -மேற்படி- |
| (உ) | வருடாந்த மதிப்பீடுகளில் ஒதுக்கிடப்படாத தேசிய பெறுகை ஆணைக்குழுவிற்காக ரூபா 43,400,000 வீதத்திலும் உலக உணவு மானிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 3,868,600,000 வீதத்திலும் குறை மதிப்பீடு மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | தேசிய பெறுகை ஆணைக்குழு 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு ஒதுக்கீடுகளை கொண்டிருக்கவில்லை என்பதால் 2024 ஆம் ஆண்டிற்கான புதிய வரவு செலவுத்திட்ட தலைப்பொன்றை அறிமுகப்படுத்தும் வரை அதிமேதகு ஜனாதிபதியின் செலவின தலைப்பின் ஊடாக அனுமதிப்பத்திர இல. 355 இன் கீழ் ரூபா 43.3 மில்லியன் தொகை மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டது.<br><br>2023 – 2027 (CSP 2023-2027) காலப்பகுதிக்காக உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்துதல் சனாதிபதி அலுவலகத்தின் கீழ் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்டுவரப்பட்டதால், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஏற்பாடுகளை குறைநிரப்பு மதிப்பீடு மூலம் சனாதிபதி அலுவலகத்திற்கு மாற்றுவதற்கு 2023.01.10 ஆம் திகதி தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தினால் அனுமதிப்பத்திர இலக்கம் 01 இன் கீழ் செய்யப்பட்டது. 2022-2023 ஆண்டுகளின் போது ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு அவசரமாக பதிலளிப்பதற்காக, உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 2,068,600,000 பெறுமதியிலான உணவுப் பொருட்களினை பொது கணக்குகள் சுற்றறிக்கை 30/94 இன் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு தேவையான மேலதிக ஏற்பாட்டினை பெற குறைநிரப்பு மதிப்பீடு மூலம் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் அனுமதிப்பத்திர இலக்கம் 361 இன் கீழ் 2023.10.25 ஆம் திகதி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. | |
| (ஊ) | குறைநிரப்பு மதிப்பீடு மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்ட எட்டு செலவின விடயங்களுடன் தொடர்புடைய ரூபா 253,481,202 தொகை செலவளிக்காமல் எஞ்சியிருந்ததுடன், இது 12 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் உள்நாட்டு பயண செலவுகளை கடுமையாக கட்டுப்படுத்தல், போக்குவரத்து பணிகளுக்காக குறைந்த செலவு முறைகளை பயன்படுத்தல், திசெம்பர் மாதத்தின் நீர் மற்றும் மின்சார கட்டணங்கள் இந்த சேமிப்புக்களில் உள்ளடங்குதல், பெறுகை வழிகாட்டிகள் மற்றும் கையேடுகளை அச்சிடுதல் குறைந்த செலவில் செய்யப்படுதல், இரண்டு ஊழியர்கள் மாத்திரமே பெறப்பட்ட ஆதன கடன் தொடர்பில் வட்டியை செலுத்துதல், குறைந்த விலையில் தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களினை கொள்வனவு செய்தல், குறைந்த விலையில் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல், உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அரச பங்களிப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது, மற்றும் ஏற்பாடுகள் எஞ்சியமைக்கு மேற்குறிப்பிட்ட காரணங்கள் பங்களிப்பு செய்துள்ளன. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிகளை முடிப்பதில் தோல்வி

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 12 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 348,654,373 தொகை ஏற்பாட்டில் ரூபா 239,275,587 மாத்திரமே செலவிடப்பட்டுள்ளது. அதன்படி எட்டு நிறுவனங்களினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாட்டில் 31 சதவீதம் அல்லது ரூபா 109,378,786 தொகை பயன்படுத்தப்படவில்லை. | சனாதிபதி அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களிடையே முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் செயற்திட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.<br><br>கல்வி அமைச்சு மற்றும், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளை தவிர ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட ஏற்பாடுகள் மிகவும் வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை தெரிவு செயகின்ற போது அவசிமானதும் சாத்தியமானதுமான செயற்திட்டங்களினை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் 40 சதவீதம் மற்றும் 76 சதவீதம் செலவளிக்கப்படாமல் எஞ்சியுள்ளதுடன், மற்றும் ஒதுக்கீடுகள் வினைத்திறனாக பயன்பட்டுள்ளதையும் பயன்படுத்தப்படாத அந்த நிதி ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழங்கப்படுள்ளதையும் உறுதிப்படுத்துவதற்கு முறைமை காணப்படவில்லை. | இலங்கை போக்குவரத்து சபையின் கோரிக்கைக்கு அமைய பொத்துவில் உப டிப்போவினை பிரதான டிப்போவாக தரமுயர்த்துவதற்கு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு ரூபா 60 மில்லியன் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த செயற்திட்டத்தினை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கும் பட்டியல்களினை தீர்ப்பதற்கும் தேவையான நிதிகளை வழங்குவது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் முழுப் பொறுப்பாகும்.<br><br>கல்வி அமைச்சின் நிர்மாணத்திற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு வழங்கி, இந்த நிர்மாணத்தினை மேற்கொள்வதற்கும் அதனோடு தொடர்புடைய பட்டியல்களினை தீர்ப்பதற்கும் கட்டு நிதி வழங்குவது கல்வி அமைச்சின் பொறுப்பாகும், மற்றும் இது சனாதிபதி அலுவலகத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கானவருடாந்த ஒதுக்கீடுகளினை வினைத்திறனாக பயன்படுத்துதல் தொடர்பில் ஒழுங்கான மேற்பார்வை முன்னெடுக்கப்பட வேண்டும். |

## 3.2 பிரதான தொழிற்பாடுகளுக்கு முரணான நடவடிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வுபெற்ற சனாதிபதிக்காக மூலதன சொத்து மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செலவு விடயத்திற்கு ரூபா 1,000,000 ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எவ்வித செலவுமின்றி முழு ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டு, நிதி நிலைமைக்கூற்றில் நிலுவைத் தொகையினால் எதிர்பார்த்த படி செலவினம் ஏற்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அபிவிருத்தி ஆரம்ப ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு செலவின விடயத்திலிருந்து முன்னாள் சனாதிபதியின் விடுதியினை பழுதுபார்ப்பதற்காக இலங்கை கடற்படைக்கு ரூபா 18,336,135 ஏற்பாடும், விடுதிகளில் மின்தூக்கியை (escalator) நிறுவுவதற்காக ரூபா 15,093,876 தொகையும் மற்றும் மின்பிறப்பாக்கியை (generator) கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,885,844 தொகையும் பட்டியல் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த செலவினங்கள் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பிற்கான மொத்த செலவினத்தில் 10 சதவீதமாக இருந்ததுடன் வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் இருந்து அதே சனாதிபதிக்கான மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடுகையில் அந்த ஒதுக்கீட்டினை விஞ்சி ரூபா 37,315,855 தொகை அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு செலவு வகுப்பின் கீழ் செலவிடப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது என அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். எவ்வாறாயினும், ஓய்வு பெற்ற சனாதிபதிக்கு வசதிகளை வழங்குவது தொடர்பில் எழுந்த சில அத்தியவசிய பராமரிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு 001-1-03-5-2001 என்ற பாதீட்டு தலைப்பின் கீழ் ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாததால் அபிவிருத்தி ஆரம்ப ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு செலவின விடயத்தின் கீழ் இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். மின்தூக்கி (escalator) மற்றும் மின்பிறப்பாக்கி (generator) என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 19,979,720 தொகை புதிய மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காகும். அந்த நேரத்தில் 001-01-01-0-2103 என்ற செலவின விடயத்தில் ஒதுக்கீடுகள் போதுமானதாக இருக்கவில்லை என்பதால் அபிவிருத்தி ஆரம்ப ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு செலவின விடயத்தின் கீழ் செலவளிக்கப்பட்டது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவதில் விரும்பிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அபிவிருத்தி ஆரம்ப ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு செலவின விடய ஏற்பாட்டில் இருந்து ரூபா 45,710,216 தொகை கொழும்பு மாவட்டத்தில் உள்ள பிரதான மூன்று பாடசாலைகளின் கட்டிட புனரமைப்பு மற்றும் நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்ட போதிலும் பாடசலையினை தெரிவு செய்தமை தொடர்பில் அளவுகோல்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | கொழும்பு ஆனந்தா வித்தியாலயம், விசாகா வித்தியாலயம் மற்றும் றோயல் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் கோரிக்கைகளை கருத்திற்கொண்டு அந்த பாடசாலைகளின் நல்வாழ்வுக்காக மிக முக்கியமானதும் அத்தியவசியமானதுமான பராமரிப்பு பணிகளை முன்னெடுப்பதற்கு நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன என்பதனை அன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.<br><br>இப்பாடசாலைகளின் திருத்தப் பணிகளை முன்னெடுப்பதற்காக மாத்திரமின்றி புத்தளம் மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளில் பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களின் நிர்மாணத்திற்காகவும் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | அபிவிருத்தி செயற்திட்டங்களை தெரிவு செய்கின்ற போது தேவைகளை கவனமாக கருத்திற்கொள்ள கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஏலத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட 07 வாகனங்கள் மற்றும் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட 06 வாகனங்கள் தொடர்பில் இதுவரை பூர்த்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | மதிப்பீட்டு குழுவிடமிருந்து மதிப்பீட்டு பெறுமதியை உள்ளடக்கிய இரகசிய அறிக்கையை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த 07 வாகனங்களை ஏலமிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், சட்டவழக்குடைய 03 வாகனங்களும் மற்றும் கறுப்புப் பட்டியலில் உள்ள வாகனங்களும் தவிர்ந்த ஏனைய வாகனங்களினை அகற்றும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன், தொடர்புடைய வாகனங்களினை அகற்றும் பணியை விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அன்புடன் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். | சொத்துக்களை ஏலமிடல் மற்றும் அகற்றுதல் தொடர்பான பணிகளை விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |